2014 ஜூலை 31]

என்றுதான் விதி இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 295, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

295—

தனி அடையாள அட்டை

***12257—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தனி அடையாள அட்டை வழங்கும் பணியை விரைவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு நபருக்கும் தனி அடையாள அட்டை வழங்கும் பணியை விரைவாகச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேசிய மக்கள்தொகை பதிவேடு, உயிர் புள்ளியியல் Biometric Ennumeration கணக்கெடுப்புப் பணி ஜூன் 2011 முதல் தொடங்கப்பட்டு தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. தேசிய மக்கள்தொகை பதிவேடு, உயிர் புள்ளியியல் கணக்கெடுப்புப் பணியில் 5 வயது மற்றும் 5 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனி நபரின் புகைப்படம், கைரேகைப் பதிவுகள் மற்றும் விழித்திரை படல அமைப்பு உயிர் புள்ளியியல் ஆகியவை பல்வேறு கட்டங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. இப்பணி Bharat Electronics Limited, Bangalore நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாடு மக்கள் கணக்கெடுப்புப் பணி இயக்குநர் அவர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. இந்நேர்வில், பணி முன்னேற்றம்

குறித்து மக்கள்தொகை கணக்கெடுப்பு உயர் அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுடன் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் மாதந்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, இப்பணியினை உரிய காலத்தில் முடிப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மாவட்டங்களில் விளம்பரங்கள், ஆட்டோ விளம்பரங்கள் மூலமாகவும் கணக்கெடுப்புப் பணியில் விடுபட்ட நபர்களுக்கு அவர்கள் விவரங்கள் அடங்கிய சீட்டு அக்குடும்பங்களுக்கு, அவர்களது இருப்பிடங்களில் வழங்கப்பட்டும், மேலும் குறுஞ்செய்திமூலம் பதிவு செய்யுமாறும் தகவல் தெரிவிக்கப்படுகிறது. மேலும், சில மாவட்டங்களில் இப்பணியினை விரைவாக முடிக்க கூடுதல் கருவிகள் மற்றும் முகவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 5 வயதுக்கு மேற்பட்ட 6 கோடியே 74 இலட்சத்து 18 ஆயிரத்து 169 மக்கள்தொகையில் 4 கோடியே 91 இலட்சத்து 54 ஆயிரத்து 640 நபர்களில் 72.91 சதவீதம் விவரங்கள் குறித்த கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளது. 21-7-2012 ஆம் தேதியில் 4 கோடியே 65 இலட்சத்து 11 ஆயிரத்து 709 நபர்களுக்கு மைய அரசின் நிறுவனமான Unique Identification Authority of India வாயிலாக ஆதார் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கமாகப் பதில் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 296, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.